# இயல் 6.8 - பட்டியல், இலாபம் மற்றும் நட்டம்

பயிற்சி எண் :: 6.8.2.2.G

பட்டியல், இலாபம் நட்டம் - த.நா.அ. புத்தகம் பயிற்சி 3.2.7

## பட்டியல், இலாபம் நட்டம் - த.நா.அ. புத்தகம் பயிற்சி 3.2.7

ஒரு காய்கறி விற்பனையாளர் ஒரு வாரத்தின் முதல் மூன்று நாட்களில் ஒரு நாளுக்குக் கிலோ ஒன்றுக்கு ₹10 வீதம் 10 கி.கி தக்காளி வாங்கினார். இந்த 3 நாட்களில் நாள் ஒன்றுக்கு 1 கி.கி தக்காளி நசுங்கிவிட்டது. வாரத்தின் மீதமுள்ள 4 நாட்களில் தினமும் கிலோ ஒன்றுக்கு ₹8 வீதம் 15 கி.கி தக்காளி வாங்கினார். வாரம் முழுவதிலுமே ஒரு கி.கி தக்காளி ₹20 வீதம் விற்பனை செய்கிறார் எனில் அந்த வாரத்தின் அவரது இலாபம் நட்டம் காண்க.

---

நாளொன்றுக்கு 10 கி.கி வீதம் கிலோ ஒன்றுக்கு ₹10 வைத்து முதல் 3 நாட்களுக்கு வாங்கிய தக்காளியின் விலை = 10 × 10 × 3 = ₹300

அதேபோல், நாளொன்றுக்கு 15 கி.கி வீதம் கிலோ ஒன்றுக்கு ₹8 வைத்து, கடைசி 4 நாட்களுக்கு வாங்கிய தக்காளியின் விலை = 15 × 8 × 4 = ₹480

வாங்கிய மொத்தத் தக்காளியின் அடக்க விலை = 300 + 480 = ₹780

தினம் 1 கி.கி வீதம் முதல் 3 நாட்களுக்கு நசுங்கி சேதமான தக்காளியின் எடை = 1 × 3 = 3 கி.கி

எனவே வாரம் முழுவதும் விற்பனைக்கு வந்த தக்காளியின் எடை = $\overbrace{(10 \times 3)}^{\text{முதல் 3 தினம்}} - \overbrace{3}^{\text{சேதம்}} + \overbrace{(15 \times 4)}^{\text{அடுத்த 4 தினம்}}$

= 30 + 60 - 3

= 87 கி.கி

ஒரு கி.கி தக்காளியின் விற்பனை விலை = ₹20

எனில் 87 கி.கி தக்காளியின் விற்பனை விலை = 87 × 20 = ₹1,740

∵ அடக்க விலை < விற்ற விலை, எனவே, விற்பனையில் அவருக்குக் கிடைத்தது இலாபம். ⇒ இலாபம் = விற்ற விலை - அடக்க விலை

∴ தக்காளி வியாபாரத்தில் கிடைத்த மொத்த இலாபம் = 1740 - 780

= ₹960

காய்கறி வியாபாரிக்கு அந்த வார தக்காளி விற்பனையில் கிடைத்த மொத்த இலாபத்தொகை ₹960 ஆகும்.

Sum & solution prepared on Friday 3rd December, 2021 :: 06:39 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020.**
**https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org**

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**